27.11.2024

S.C.No. 21/2024

PW. 6 Tr. திரு. முருகன்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-**

எனக்கு தமிழ் தொியுமா என்றால் பேச தொியும். எனக்கு எந்த ஊர் என்றால் திருவனந்தபுரம். பிறந்ததில் இருந்து அங்குதான் இருக்கிறேன். மனோஜ் இறந்த விவரம் எனக்கு எப்போது தொியும் என்றால் 9.30 மணிக்கு தொியும். எப்போது வந்தோம் என்றால் இரவு 12.30 மணிக்கு வந்தோம். நேராக வீட்டிற்கு சென்றோமா என்றால் ஆஸ்பத்திாிக்கு சென்றோம். ஆசாாிபள்ளம் மருத்துவமனைக்கு சென்றோமா என்றால் வெட்டூர்ணிமடம் மருத்துவமனைக்கு சென்றோம். வெட்டூர்ணிமடத்திலிருந்து ஆசாாிபள்ளம் மருத்துவமனைக்கு எப்போது சென்றோம் என்றால் நான் ஆசாாிபள்ளம் மருத்துவமனைக்கு செல்லவில்லை. ராஜகோபாலுடன் நான் புகார் கொடுக்க போலீஸ் நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. போலீசார் 2.00 மணி போல் வந்தார்கள். எல்லாம் எழுதி முடிப்பதற்கு 3.30 மணி ஆனது. எத்தனை கையொப்பம் போட்டோம் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. எதற்காக கையொப்பம் போட்டோம் என்றால் ஒரு பேப்பரில் ஒரு டிரஸ் கைப்பற்றியதாக சொல்லி அதில் கையொப்பம் போட சொன்னார்கள் போட்டேன். என்ன டிரஸ் என்று தொியுமா என்றால் தொியும்.

ஜீன்ஸ் பேண்ட்ம், நீலம் கருப்பு கட்டம் போட்ட சர்ட். ஜீன்ஸ் என்ன கலர் என்றால் சாம்பல் கலர். துணி எல்லாம் போலீசார் எடுத்து சென்று விட்டார்களா என்றால் அது எனக்கு தொியாது. நான் எனது மருமகனுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீஸ் நான் சொல்வது போல அங்கு வரவில்லை, நானும் வெட்டூர்ணிமடம் மருத்துவமனைக்கு செல்லவும் இல்லை, நான் சொல்வது போல எந்த ஆடைகளையும் போலீஸ் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.